பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 19 ஞாயிற்றுக்கிழமை 02.05.2021 கதிர் 178

### இது ரகசியம் அல்ல!

கொழும்புத் துறைமுக நகர விவகாரம் இவ்வாரம் தீர்க்கமான ஒரு கட்டத்தை எட்டும் என எதிர் பார்க்கலாம்.

கொழும்புத் துறைமுக நகரத்தைநிர்வகிப்பதற்கான ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில்

பக்கம்02 »

## கொரோனாச் சாவு 687ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 9 பேர் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன நேற்றிரவு தெரிவித்தார்.

8 ஆண்களும், ஒரு பெண்ணும் உயிரிழந்துள்ளனர்.

அவிசாவளை பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயது ஆண், கரந்தன பிரதேசத்தைச்

2

# மறு அறிவித்தல் வரும் வரைக்கும் பாடசாலைகள், பல்கலைகள் மூடல்

### மேலதிக வகுப்புகளுக்கும் தடை என்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்



இலங்கையில் கொரோனா நிலைமை மோசமடைந்து வருவதால் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவை மறு அறிவித்தல் வரும் வரைக்கும் மூடப்பட்டிருக்கும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அதேவேளை, மேலதிக வகுப்புகளுக்கும் மறு அறிவித்தல் வரைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஹோட்டல்களில் கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களை நடத்துவதற்கு அனுமதி கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

2




# மின்னல் வேகத்தில் பரவும் 'கொரோனா'

## நேற்று அதிக நோயாளர்கள் பதிவு 3 நாள்களில் 4,909 பேர் அடையாளம்



**இலங்கையில் கொரோனா வைரஸ் மின்னல் வேகத்தில் பரவி வருகின்றது. நாளொன்றில் அதிகமான கொரோனா நோயாளர்கள் நேற்றுப் பதிவாகியுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

2

## கடுமையான கட்டுப்பாடுகளுடன் புதிய சுகாதார வழிகாட்டி வெளியீடு

நாட்டில் அதிகரித்துவரும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேலகுணவர்தனவால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய திரையரங்குகள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஹோட்டல்களில் இடம்பெறும்

2




## நான்கு கடத்தல்காரர்களை படகுடன் பத்திரமாக அனுப்பி வைத்த கடற்படை

### கொரோனா அச்சம் காரணமாக





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.02

இந்தியாவில் இருந்து மன்னாருக்கு பீடி இலை கடத்தி வந்த 4 இந்திய மீனவர்கள் கொரோனா அச்சம் காரணமாக பத்திரமாக இந்தியாவிற்கு திருப்பி

2

## வடக்கில் 25 பேருக்கு கொரோனா தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 25 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும்

2

## யாழ்.கல்விப் பணிப்பாளராக இராதாகிருஷ்ணன் நியமனம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.02

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராக தற்போதைய வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக

2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரிக்கப்பட்டு விட்டது. அதன் முடிவு – தீர்ப்பு – சபாநாயகருக்கும், ஜனாதிபதிக்கும் எழுத்தில் உயர்நீதிமன்றத்தினால் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், அந்தச் சட்டமூலம் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என சபாநாயகர் அறிவித்திருக்கின்றார்.

இந்தச் சட்டமூலம் மீதான தனது முடிவை அறிவிப்பதற்கு எதிர்வரும் 6ஆம் திகதி வரை உயர்நீதிமன்றத்துக்கு காலம் – அவகாசம் – இருந்தது. எனினும் கடந்த வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்னர் தனது முடிவை உயர்நீதிமன்றம் எழுத்தில் அனுப்பியிருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தத் தீர்ப்பு – முடிவு – தமக்குக் கிடைத்தமையால்தான் அந்தச் சட்டமூலம் மீதான விவாதத்துக்கு சபாநாயகர் திகதி குறிப்பிட்டிருக்கின்றார் எனக் கருதப்படுகின்றது. விவாதம் புதனன்று என்பதனால் முதல் நாள் செவ்வாயன்றாவது தீர்ப்பை நாடாளுமன்றில் சபாநாயகர் அறிவிக்க வேண்டும்.

பல சர்ச்சைக்குரிய சரத்துகள் இந்தச் சட்டமூலத்தில் உள்ளன. வழக்கமாக அரச கணக்கு – வழக்குகளுக்கு நாடாளுமன்றம் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளது. அதுபோல நாட்டுக்குள் வருவோர் – போவோர் குறித்து நடவடிக்கை எடுக்கும் சட்ட அதிகாரம் குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்துக்குரியது. அது போன்றே சுங்க விடயங்கள் சுங்கத் திணைக்களத்துக்கு உரியது. கொழும்புத் துறைமுக நகரத்தில் இத்தகைய விடயங்களைக் கையாளும் தனித்துவ அதிகாரம் மேற்படி ஆணைக்குழுவுக்கு வழங்கப்படுகின்றது.

அதனால்தான் இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் தாம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கொண்டிருந்த அதிகாரங்களை விட, கொழும்புத்துறைமுக நகர ஆணைக்குழுவுக்கு அரசு வழங்க உத்தேசித்திருக்கும் அதிகாரங்கள் அதிகம் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.

நிச்சயமாக இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றுக்கு வரும் போது – புதனன்று – நாடாளுமன்றத்தில் களேபரம், வாதப் பிரதிவாதம், குழப்பங்கள் நடைபெறுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

ஏற்கனவே இலங்கையின் சீன சார்புப் போக்கினால் பெரிதும் குழம்பியிருக்கும் புதுடில்லி இந்தச் சட்டத்தின் யாக்கம், நாடாளுமன்றத்தில் அதன் மீதான விவாதம், நிறைவேற்றப்படப் போகும் சட்டத்தின் வடிவம், ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படப் போகும் ஆணையாளர்கள் விவரம் போன்றவை தொடர்பில் எல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதாகத் தகவல்.

கொரோனாத் தொற்றுப் பரவல் தடுப்பைக் கையாள்வதில் கூட சீன – இந்திய பனிப் போருக்கு நடுவில் அல்லாடுகின்றது கொழும்பு.

கொரோனாத் தொற்றுத் தடுப்புத் தொடர்பாக தென்னாசிய வெளிவிவகார அமைச்சர்களின் முக்கிய மாநாடு ஒன்று கடந்த செவ்வாயன்று சூம் முறை மூலம் நடைபெற்றது.

இந்தியாவும், அதன் அணியைச் சேர்ந்த பூட்டான், மாலைதீவு போன்றவையும் இந்த மாநாட்டில் பங்குபற்றவில்லை.

இலங்கை, ஆப்கான், பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர்களுடன் சீன வெளிவிவகார அமைச்சரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

தென்னாசிய விவகாரத்தில் சீனாவுக்கு என்ன வேலை என்பதுதான் இந்த மாநாட்டைத் தவிர்த்த புதுடில்லியின் நிலைப்பாடு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

மா புளிப்பது அப்பத்துக்கு நல்லது என்பார்கள். சீனாவின் பக்கம் கொழும்பு அளவுக்கு மேல் சாய்வது, தமிழருக்கு நல்லது என்கின்றார் முக்கிய இராஜதந்திரி ஒருவர்.

Every action has a reaction (ஒவ்வொரு செயலுக்கும் ஓர் எதிர்வினை உண்டு). கொழும்புத் துறைமுக நகர சட்டத்தின் யாக்கத்துக்கும் ஓர் எதிர்வினை உண்டு. தமிழர்களுக்கு அது சாதகமான சூழலை உருவாக்கும் என நம்புவோமாக.

★ ★ ★

வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒன்றிணைத்து முன்னெடுப்பதற்கான தனது விசேட பிரதிநிதியாக வடக்கின் முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நியமிக்கவிருக்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

இது தொடர்பில் ரெஜினோல்ட் கூரேயின் இசைவை ஜனாதிபதி கோரியிருந்தார் என்றும், கூரே தமது இசைவைத் தெரிவித்து விட்டார் என்றும் அறியவந்தது.

கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும் –

அவை முன்னெடுக்கப்படாமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையை அடுத்து, ஜனாதிபதியின் பிரதிநிதியாக – அவரின் அதிகாரங்களைப் பிரயோகித்து – அவற்றை முன்னெடுக்கும் பொறுப்பு ரெஜினோல்ட் கூரேயிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றது என்றும் – கூறப்படுகின்றது.

வடக்கு, கிழக்கை உள்ளடக்கிய எட்டு மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள், ஆளுநர்கள் மற்றும் அரச திணைக்களங்கள் என்று பல தரப்புகளையும் ஒன்றிணைத்துச் செயற்படும் அதிகாரம் வடக்கு – கிழக்கு ஒன்றிணைப்புப் பிரதிநிதிக்கு வழங்கப்படும் எனத் தெரிகின்றது.

அடுத்து வரும் வாரங்களில் இந்தப் புதிய பதவியின் அதிகாரங்கள், வரம்புகள், நியமனம் பற்றிய விடயங்கள் வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

– மின்னல் –

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 65 வயது ஆண், ருவான்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயது ஆண், தேவாலகம பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயது பெண், மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயது ஆண், யக்வில பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயது ஆண், வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயது ஆண், இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயது ஆண், குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயது ஆண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 687 ஆக உயர்வடைந்துள்ளது.

## மறு அறிவித்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, எதிர்வரும் வெசாக் பூரணை தினம் மற்றும் ரமழான் கொண்டாட்டங்களை மக்கள் தமது வீடுகளில் இருந்தவாறே கொண்டாடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (முதல் வந்த செய்தி 10ஆம் பக்கத்தில்)

## மின்னல் வேகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று 1,716 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 1500ஐக் கடந்துள்ளது. கடந்த மூன்று நாள்களில் 4 ஆயிரத்து 909 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 862 ஆக உயர்வடைந்துள்ளது.

நோயாளர்களில் 96 ஆயிரத்து 478 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 12 ஆயிரத்து 706 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

## வடக்கில் 25 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 454 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 25 பேருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தலா 7 பேரும், மன்னார், வவுனியா மாவட்டங்களில் தலா 4 பேரும், முல்லைத்தீவில் மூவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். திருநெல்வேலியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் 3 பேரும், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற இருவருமாக 5 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நோயாளி ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா பொதுச்சந்தையில் வியாபாரிகளிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. பூவரசம் குளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

மன்னார் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 4 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, மாங்குளம் ஆதார வைத்தியசாலை மற்றும் மல்லாவி ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெற்ற தலா ஒரு நோயாளிக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது – என்றார்.

## கடுமையான கட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விருந்துபசாரங்கள், கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் இரவுநேர கேளிக்கை நிகழ்வுகள் போன்றவற்றுக்கு மூன்று வாரங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடைகள், சிறப்பு அங்காடிகள் மற்றும் துணிக்கடைகளில் 25 வீதமானவர்களே அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஒரு நேரத்தில் உள்ளே இருக்கக்கூடிய அதிகபட்ச எண்ணிக்கையை வெளியில் காட்சிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடையின் உள்ளே இருக்கும் போது இரண்டு நபர்களிடையே ஒன்றரை மீட்டர் இடைவெளி பேணப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டங்கள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் உள்ளிட்ட அனைத்து ஒன்று கூடல்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆலயங்கள், கலாசார மற்றும் திருமண நிகழ்வுகளில் மக்கள் ஒன்று கூடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

நீச்சல் தடாகங்கள், பார்கள், இரவு விடுதிகள், பப்கள், பந்தய மையங்கள் என்பவற்றுக்கு மறு அறிவித்தல்வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

இசைக்கச்சேரிகள், திருவிழா மற்றும் கொண்டாட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களில் 25 வீதமானவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் சிறைச்சாலைகளில் பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மேலதிக வகுப்புகள் மறு அறிவித்தல் வரை மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனா அல்லாத மரணங்களின் இறுதிச் சடங்குகள் 24 மணி நேரத்துக்குள் இடம்பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மரணங்களின் இறுதி சடங்கு நிகழ்வில் 25 பேர் மாத்திரமே பங்குகொள்ள முடியும் எனவும் சுகாதார வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மே மாதம் 04 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை திருமண நிகழ்வுகளை நடத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று (மே முதலாம் திகதி) முதல் நடைமுறைப்படுத்தப்படும் இந்த விதிமுறைகள், இம்மாதம் 20ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன் பின்பு கொரோனாத் தொற்று நிலைமையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.கல்விப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணியாற்றும் முத்துகுமாரு இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த சந்திரராஜா கடந்த மார்ச் மாதம் ஓய்வு பெற்றுச் சென்றமை முதல் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இரவிச்சந்திரன் யாழ் வலயத்தில் பதில் கடமையாற்றினார். இக் காலத்தில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு நியமனம் பெறப் பலர் போட்டியிட்டனர்.

இந்த நிலையிலேயே எதிர்வரும் 5ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராக முத்துகுமாரு இராதாகிருஷ்ணனுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கில் ஏற்படும் வெற்றிடத்திற்கு தற்போதைய வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன் நியமிக்கப்படுகின்றார்.

இதேநேரம் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய உமாநிதி புவனராஜா கடந்த 26ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். அந்த இடத்திற்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் பதில் கடமையாற்றுகின்றார்.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளரான பிரட்லி ஜெனாட் மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்படுகின்றார். இதன் காரணமாக மன்னாரிலும் வெற்றிடம் ஏற்படுகின்றது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரான சு.சுந்தரசிவம் ஜூன் 28ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நான்கு கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தியாவில் இருந்து நாட்டுப்படகில் பொதிகளுடன் வந்த நால்வரை மன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர். அவர்களின் படகில் பெருந்தொகை பீடி இலை மூடைகள் இருப்பதை அவதானித்த கடற்படையினர் படகை மன்னார் கரைக்குக் கொண்டு வந்தனர்.

இந்திய நாட்டுப் படகில் இருந்த பீடி இலைகள் அனைத்தும் அங்கு இறக்கப்பட்டன. எனினும் கொரோனா அச்சம் காரணமாக 4 இந்திய கடத்தல்காரர்களும் அவர்களின் படகுடன் நேற்று முன்தினமே உடனடியாகவே பத்திரமாக இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அந்த 4 இந்திய மீனவர்களும் தற்போது இந்தியா திரும்பிய நிலையில் இந்திய பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Nurses, Engineering Diploma holders in HNDE, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

# 2019 இல் வாகன ஒலி போராட்டத்தை ஆதரித்த மஹிந்த இன்று எதிர்க்கிறாரா?

## ஐ.தே.க. கேள்வி

கடந்த 2019ஆம் ஆண்டில் வாகன ஒலி எழுப்பும் போராட்டத்துக்கு ஆதரவளித்த தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இன்று அவ்வாறான போராட்டங்களை ஏன் எதிர்க்கின்றார் என ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு மே மாதம் முக்கிய பிரமுகர் ஒருவர் பயணம் செய்வதற்காக வீதி மூடப்பட்டிருந்த போது மக்கள் அதிருப்தியில் வாகன ஒலி எழுப்பி எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மக்களின் செயற்பாடு நியாயமானது என சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், அண்மையில் சீனப் பாதுகாப்பு அமைச்சர் பயணித்த போது வாகன நடமாட்டம் முடக்கப்பட்டமைக்கு அதேவிதமாக மக்கள் வாகனங்களில் ஒலி எழுப்பி எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்த இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அந்த இளைஞரைக் கைது செய்தமை பிழையானது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

குறித்த நபர் ஏன் எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்பது தெளிவாக விளக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

பொதுமக்களின் எதிர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதை இந்தக் கைது நிரூபணம் செய்கின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரம் என்பனவற்றை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கொரோனாப் பரவல் 5 நாள்கள் அதிகரிப்பு

இலங்கையில், கொரோனா வைரஸ் தொற்றாளர்களை இனங்காண்பதற்கான பி.சி.ஆர். பரிசோதனையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்சமயம் நிலவும் கொரோனாத் தொற்றுப் பரவல் அபாய நிலையை கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சு இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாத்திரம் 23 ஆயிரத்து 700 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை நாளொன்றில் மேற்கொள்ளப்பட்ட அதிக பி.சி.ஆர். எண்ணிக்கையாகக் கருதப்படுகிறது.

இலங்கையில் இதுவரையில் 20 லட்சத்திற்கும் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் 5 நாள்களில் 5ஆயிரத்து 769 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இலங்கையில் கடந்த சில நாள்களாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஆகக் கூடுதலான தொற்றாளர்கள் வெள்ளிக்கிழமை பதிவாகியுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 1,662 எனத் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தொற்று நோயியல் பிரிவின் அறிக்கைக்கு அமைவாக கடந்த ஐந்து நாள்களில் பதிவான மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 769 ஆகும்.

இதே போன்று, இலங்கையில் இதுவரை பதிவான மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 146 ஆகும். இவர்களுள் 11 ஆயிரத்து 769 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
Contact :
021 221 56 56
076 122 15 66
070 330 55 00
பிரான்ஸ், ஜேர்மனி பெல்ஜியம்,
1100/=
(11 kg க்கு மேல்)
டென்மார்க் நெதர்லாந்து
லண்டன் 1000/=
(11 kg க்கு மேல்)
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம், சங்கானை, கல்வியங்காடு, ஆவரங்கால், நெல்லியடி, கைதடி
சங்கத்தானை, பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கனகராயன் குளம்
மல்லாவி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
சமையல் உதவியாளர்கள்.
சுத்திகரிப்பு செய்பவர்கள்.
● ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
● வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

INDIVIDUAL ENGLISH CLASSES
விசேடமாக Grammar With Spoken Practice
25 வருடமாக கொழும்பில் English Language Literature வகுப்புக்கள் நடத்திய ஆசிரியர் தற்போது யாழ் நகரில்.
K.GANESH (BA. Pera)
Grade 6 - A/L மாணவர்கள், பட்டதாரி மாணவர்கள் (Including English Medium) பட்டதாரிகள், தொழில் புரிவோர் அனைவருக்கும் கற்பிக்கப்படும்.
யாழ். இந்துக்கல்லூரி அருகாமை
நீராவியடி, யாழ்ப்பாணம். 077 766 8725

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில் #10
Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

Online. Cleaning & Caring (PVT) LTD
உங்கள் வீடுகள், கடைத் தொகுதிகள் மற்றும் நிறுவனங்கள், அலுவலக பணியிடங்களுக்கு சுத்திகரிப்புச் சேவை தேவைப்படுபவர்களும்.
வீட்டுப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு வேலைகளுக்கு ஆட்கள் தேவைப்படுபவர்களும் தொடர்புகொள்ளவும்.
வீட்டு பணியாட்கள் தேவை. 20 - 55 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 077 435 0737

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசின் உத்தேசம் என்ன?

கொரோனாத் தொற்றைப் பரவ விடாது கட்டுப்படுத்தும் விடயத்தில் நாட்டை முடக்குவதில்லை என்று அரசுத் தலைமை பிடிவாதமாக இருந்தாலும், எவ்வுளவு தூரம் அந்நிலைப்பாட்டில் அரசு தாக்குப் பிடிக்க முடியும் என்பதுதான் கேள்வி.

நாட்டின் தற்போதைய கொரோனா வைரஸ் பரவல், சமூகப் பரவல் நிலையை எட்டி விட்டது என்றும் –

இந்தியாவின் நிலைமையை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது என்றும் –

நாட்டை உடனடியாக முடக்காது போனால் அடுத்த இரண்டு வாரங்களில் இந்தியாவின் நிலைமை இங்கு ஏற்படும் என்றும் –

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சங்கத் தலைவர் உபுல் றோஹண மீண்டும் எச்சரித்திருக்கின்றார்.

இது, அண்மைக் காலத்தில் அவர் விடுக்கும் ஒரே மாதிரியான தொடர் எச்சரிக்கைகளில் ஒன்றுதான்.

அவரின் முன்னைய எச்சரிக்கைகளை அரசு புறக்கணித்தமை போல இந்த எச்சரிக்கையும் உதாசீனப்படுத்தப்படலாம். அல்லது அது நிராகரிக்கப்படலாம்.

இவ்விடயத்தில் மருத்துவப் பிரச்சினை, சுகாதார நெருக்கடி போன்றவற்றை மட்டுமே அவர் கவனத்திலும், சிந்தனையிலும் கொண்டிருப்பார். ஆனால் அரசுக்கோ பல பிரச்சினைகள், சிக்கல்கள், நெருக்கடிகளைக் கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கும். அவற்றின் அடிப்படையில்தான் அரசு தீர்மானம் எடுக்க வேண்டியிருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அது சரிதான். வாஸ்தவம்தான்.

ஆனால், சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் கூறுகின்றமை போல நாட்டை முடக்க வேண்டிய ஒரு நிலைமைக்கு அரசு வரவேண்டியிருக்குமானால், அதைக் காலம் தாழ்த்திச் செய்வதை விட, நேரத்துடன் செய்தால், அதன் மூலம் எட்டக் கூடிய பலனைக் குறுகிய காலத்தில் அடையக் கூடியதாக இருக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

தொற்றுப் பரவல் மோசமடைய முன்னர் நாட்டை முடக்கினால், அதன் மூலம் தொற்றுப் பரவலைக் கணிசமாகத் தடுப்பதற்கு குறைந்த காலம் போதும். மாறாக, பெரும் சமூகப் பரவலாக அது உருவெடுத்த பின்னர், நாட்டை முடக்கி, அந்தப் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாயின் அதற்கு முடக்கத்தை நீண்ட காலத்துக்கு நீடிக்க வேண்டியிருக்கும். இதுவே தீர்மானம் எடுப்பதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

அடுத்து உபுல் றோஹண குறிப்பிடுகின்றமை போல நாடு, இந்தியா போன்ற நிலைமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றதா என்ற கேள்வி நிபுணர்களினால் ஆராயப்பட வேண்டிய ஒன்று.

சுமார் 140 கோடி சனத் தொகையைக் கொண்ட இந்தியாவில் இன்று ஒரு நாளைக்கு நான்கு லட்சம் பேருக்குத் தொற்று ஏற்படும் நிலைமை. அதாவது மூவாயிரத்து ஐந்நூறு பேரில் ஒருவர் தினசரி தொற்றுக்கு உள்ளாகும் நிலைமை.

ஆனால், சுமார் 2 கோடி பதினைந்து லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இலங்கையில் இப்போதையை பரவல் வீதம் ஒரு நாளைக்கு ஆயிரத்து ஐந்நூறு முதல் ஆயிரத்து அறுநூறு வரை என்பதுதான். சுமார் பதினையாயிரம் பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாள் தொற்று உள்ளது.

அப்படிப் பார்த்தால் இன்றைய நிலைமை – இப்போதைய சூழல் – மோசமான கட்டம் அல்ல.

ஆனால், இந்த ஒப்பீடு கூட மருத்துவ, சுகாதார வசதிகளின் அடிப்படையில்தான் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதற்கிடையில், கொரோனாத் தொற்று தொடர்பில் சுகாதார அமைச்சு வழங்கிய சில தகவல்கள் பொய்யானவை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

சாதாரண விடயமாக உதாசீனப்படுத்தும் விவகாரமன்று இது. குற்றம் சுமத்தும் தரப்பு நிபுணர்களின் கட்டமைப்பு. இலங்கை மருத்துவர்களின் சங்கம். அதன் குற்றச்சாட்டுக் குறித்து சுகாதார அமைச்சு பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளது.

நோய்த் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வைத்தியசாலை வசதிகள் எவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ளன? எத்தனை புதிய கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன? அதற்கான ஆளணி வளம் உண்டா? வெறும் கட்டில்கள் மட்டும் போதுமா? – இந்த அனைத்து விடயங்களும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்கும் வினாக்கள் உண்மையில் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயங்கள்தாம்.

போதிய வைத்திய வசதிகள் உண்டு என அரசு கூறுகின்ற போதும் நோய்த் தொற்றாளர்கள் பலர் வைத்தியசாலையிலோ அல்லது சிகிச்சை நிலையங்களிலோ அனுமதிக்கப்படாத நிலைமை நீடிக்கின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறுவது கவனிக்கப்பட வேண்டிய விவகாரம்.

அதற்கு அரசு பதில் தர வேண்டும். மக்களுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியது அரசின் கடமை.

கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாட்டு நடவழிக்கைகள் தொடர்பில் தனது உத்தேசத் திட்டங்கள், வியூகங்கள், எதிர்பார்ப்புகளை அரசு வெளிப்படையாக உரைக்க வேண்டும். அது அரசின் கடப்பாடு. பொறுப்பு.

# காணாமல்போனோர் விவகாரம் தீர்க்கும் முடிவுக்கு வந்துள்ளோம்!

## என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



இரண்டு வாரத்தின் பின்னர் காணாமல் போனோர் விடயத்தைக் கையாண்டு தீர்க்கும் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று காலை 11 மணியளவில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் காணாமல் போனோர் தொடர்பில் ஒரு மாதத்துக்குள் தீர்வுகள் முன்வைக்கப்படும் என அண்மையில் கூறியிருந்தீர்கள். அதன் நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளன என வினவினார்.

அதற்கு பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

அதில் முன்னேற்றம் உள்ளது. நேற்று முன்தினம் (கடந்த வெள்ளி) ஜனாதிபதியுடன் கலந்துரை யாடினேன்.

அதனை விட கொடிய நோய் ஒன்று உலகளாவிய ரீதியில் பரவியிருக்கிறது. ஆனபடியால் நாங்கள் இருவரும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்திருந்தோம். சற்று பொறுத்து ஓரிரண்டு வாரத்தின் பின்னர் அந்த விடயத்தைக் கையாண்டு தீர்க்கும் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். – என்றார்.

# ஹற்றனில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேருக்குக் கொரோனாத் தொற்று

வெலிசர விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் ஊழியர்கள் மற்றும் ஓட்டோ சாரதிகள் நேற்று சனிக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது 140 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 12 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சில முடிவுகள் கிடைக்கப்பெறவுள்ளனஎனவும்,தொற்றாளர்கள்இனங்காணப்பட்ட விற்பனை நிலையங்களை மூட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, லக்ஷ்பான நீர்மின் உற்பத்தி நிலைய வளாகத்தில் மேலும் 9 ஊழியர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து அந்த ஆலையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, ஹற்றன், டன்பார் தோட்டம் பிரதேசத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 12 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

# முல்லைத்தீவில் தனியார் காணியில் மீட்கப்பட்டது அபாயகர கைக்குண்டு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் காணி ஒன்றில் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு மூன்றாம் கண்டம்பகுதியில்உள்ளவயல்காணியிலேயே கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை தண்ணிமுறிப்பு மூன்றாம் கண்டம் பகுதியில் வசிக்கும் இலிங்கேஸ்வரன் என்பவருடைய காணியிலேயே இந்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வயல் காணிக்குள் கைக்குண்டு இருப்பதை அவதானித்த காணி உரிமையாளர், முள்ளியவளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில்



முள்ளியவளை பொலிஸார் அந்த காணிக்கு சென்று கைக்குண்டை பார்வையிட்டதோடு நீதிமன்ற அனுமதியைப் பெற்று தகர்த்தழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கை மையப்படுத்தி சீருடைகள் தயாரிக்கும் நிறுவனம்




வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி முதல் முறையாக அதி நவீன சீருடை தயாரிப்பு நிறுவனம் ஒன்று மன்னாரில் அமைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று (சனிக்கிழமை) காலை 11 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மன்னார் மூர் வீதி நெடுங்குளம் பகுதியில் AA Sports நிறுவனத்தின் பணிப்பாளர் அமல்ராஜனால் உருவாக்கப் பட்ட குறித்த நிறுவனம், நிறுவன ரீதியான ஆடைகள் மற்றும் விளையாட்டுத் துறை சார்ந்த ஆடைகளை தயாரிப்பதுடன் அச்சுத் தொழில்நுட்பம் சார்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை முழுவதற்குமான சந்தைப்படுத்தலுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த நிறுவனத்தின் ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஸார்ன்லிடிமேல், மன்னார் இன்ஸ்பெக்டர் பண்டுல வீரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம், வடமாகாணத்துக்கான விளையாட்டுத்துறை அமைப்பாளர் உட்பட பலரும் கலந்து கொண்டு வைபவரீதியாக நிறுவன செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டம் ஒரு வெளிச்ச அறை

# சர்வதேசச் சட்டமும் உள்நாட்டுச் சட்டமும்

பஸ்றி ஸீ. ஹனியா
சட்டத்துறை மாணவி
யாழ். பல்கலைக்கழகம்

சட்டம் பற்றிய புரிதலில் சட்டம் என்றால் என்ன என்பதுடன் சட்டங்கள் எவ்வகைக்குள் அடங்குகின்றன என்ற புரிதல் அவ சியமானதாகும். அந்தவகையிலே சட்டங்களில் சர்வதேசச் சட்டம், உள் நாட்டுச் சட்டம் ஆகிய பிரதான பிரி வுகள் அதிகமாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன.



இந்த இரண்டு பிரதான பிரிவுகளில் சர்வதேசச் சட்டம் என்றால் என்ன என்பது பற்றிப் பல்வேறு கருத்துக்கள் பலரால் முன்வைக்கப்படுகின்றன.

**சர்வதேசச் சட்டம்**

உலகில் உள்ள நாடுகள் தங்களிடம் காணப்படும் உறவு காரணமாக அந்த உறவை ஓர் ஒழுங்கு முறைக்குள் கொண்டு வருவதற்குப் பல பிராந்தியங்களை உள்ளடக்கி ஒப்பந்தங்கள் மூலம் இயற்றுகின்ற சட்டங்களே சர்வதேசச் சட்டங்கள் எனப்படும்.

மேலும், இவ்வாறு ஏற்படுத்தப்படும் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்ட நாடுகள் நட்டஈடு பெறுவதற்குச் சட்ட ரீதியாக உரிமை உண்டு.

அதேவேளை, மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் பாதிக்கப்படும் நாடுகளுக்கு மாத்திரம் அன்றி பலமில்லாத நாடுகளுக்கும் பலமான நாடுகள் உதவுகின்றன.

இவ்வாறான ஒருங்கிணைவு உலக நீதியையும் பேணக் கூடியவாறு இருக்கின்றது.

உலக நீதி என்பது உலகில் உள்ள நாடுகள் அனைத்தும் சமத்துவமாகக் காணப்படுதல் மற்றும் சமத்துவமான முறையில் நடத்தப்படுதலாகும்.

இந்த நகர்வில் நாடுகள் அனைத்துமே சமமாகப் பார்க்கப்பட்டு நாடுகளுக்கிடையிலான ஒற்றுமை, சமாதானம் பேணப்படும்.

**உள்நாட்டுச் சட்டம்**

மறுபுறம் உள்நாட்டுச் சட்டங்கள் என்றால் என்ன என்று நோக்குமிடத்து ஒரு நாட்டின் குடிமக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த நாட்டு அரசு (இறையாண்மை) வெளியிடும் ஒழுக்க விதிகளேயாகும். இவையே சட்டங்களாக இயற்றப்படுகின்றன.

உள்நாட்டுச் சட்டங்களைப் பொதுவாக நாட்டின் சட்டம் இயற்றும் மன்றங்கள் உருவாக்குகின்றன. உதாரணமாக இலங்கையைப் பொறுத்த வரைக்கும் நாடாளுமன்றமே சட்டங்களை இயற்றுகின்றது. அவ்வாறு உருவாக்கப்படும் சட்டங்கள் மீறப்படும் போது அரசு காவல்துறையின் பலத்தைக்கொண்டு அவற்றை நிர்வாகத்துறையில் அமுல்படுத்துகின்றது.

சர்வதேசச் சட்டங்களைப் பொறுத்தவரைக்கும் உள்நாட்டுச் சட்டங்கள் இயற்றல் போல் சர்வதேச சமுதாயம் ஒன்றில் சட்டங்கள் இயற்றும் மன்றங்கள் எதுவுமே கிடையாது; நீதித்துறைகள் கிடையாது; சட்டங்களை அமுல்படுத்தும் நிர்வாகத்துறை கிடையாது.

சர்வதேசச் சட்டமானது நாடுகளை ஆளுகின்றது, உள்நாட்டுச் சட்டமானது தனிமனிதனை ஆளுகின்றது எனப் பொதுவான கருத்துக்கள் இருக்கின்றன. இருந்தபோதிலும் நாடுகளை ஆளும் சர்வதேசச் சட்டம் மறைமுகமாக நாடுகள் எனும் பெயரில் தனி மனிதனை ஆளுகின்றது.

சர்வதேசச் சட்டத்தைப் பின்பற்றும்போது சர்வதேசச் சட்டத்தை அவ்வாறே உள்நாட்டுச் சட்டத்தில் பின்பற்றலாமா? இல்லையா? அல்லது சர்வதேசச் சட்டத்தை உள்நாட்டுச்சட்டத்துக்குள் கொண்டுவருவதற்குச் சரியான படிமுறை இருக்கின்றதா? இல்லையா? என்பது தீர்க்கப்பட வேண்டும். அந்தவகையிலேயே இதனை இரண்டு கொள் கைகளின் அடிப்படையில் விளக்குவது சாலச் சிறந்ததாக இருக்கும்.

**ஒருமைத்துவம் (Monism)**

இந்தக் கொள்கையை எளிமையாக விளக்கினால் ஒரே விடயத்தில் சர்வதேசச் சட்டமும் உள்நாட்டுச் சட்டமும் பின்பற்றப்படுகின்றன எனக் கருதலாம். இந்தக் கொள்கைச் சட்டத்தின் விதிகள் தனிநபர்களைக் கட்டுப்படுத்தினாலும் நாடுகள் அல்லது அரசு அல்லாத குழுக்களைக் கட்டுப்படுத்தினாலும் அவ்விதிகளை உள்ளடக்கிய சட்டம் ஓர் ஒற்றை அலகே என்று கருதப்படுகின்றது. அதனாலேயே இந்தக் கொள்கை ஒருமைத்துவம் எனப்படுகின்றது.

உதாரணமாக சர்வதேசச் சட்டத்தில் உருவாக்கப்படும் ஒரு சட்டத்தை ஒருமைத்துவ கொள்கையைப் பின்பற்றும் நாடானது எந்தவொரு மாற்றங்களும் இன்றி எந்தவொரு சிபாரிசுகளும் இன்றி அவ்வாறே பின்பற்றி தமது நாட்டுச் சட்டமாக மாற்றும்.

**இருமைத்துவம் (Dualism)**

இருமைத்துவக் கொள்கை என்பது உள்நாட்டுச் சட்டமும் சர்வதேசச் சட்டமும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரு சட்ட அமைப்பு முறைகளாகும்.

ஒரு சர்வதேசச் சட்டத்தை உள்நாட்டுக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு உள்நாட்டில் சட்டம் இயற்றும் தளத்திலிருந்து அனுமதி பெறுதல் அல்லது அந்த உள்நாட்டு ஆட்சி மன்றங்களின் செயன்முறைக்கு அமைய அந்தச் சட்டம் உள்நாட்டில் நடைமுறைப் படுத்தப்படும். ஒருவேளை அது நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லையாயின் சர்வதேசச் சட்டம் உள்நாட்டில் நடைமுறைப் படுத்தாமல் இழந்துவிடும்.

சர்வதேசச் சட்டத்தை உள்நாட்டு முறையில் செயற்படுத்த வேண்டிய சூழ்நிலை வரும்போது உள்நாட்டுப் பிரச்சினைகளை சர்வதேச நீதிமன்றத்தில் செயற்படுத்த வேண்டிய தேவையும் கூடவே ஏற்படுகின்றது.



**உள்நாட்டுச் சட்டமா அல்லது சர்வதேச சட்டமா மேலோங்கும்?**

சர்வதேசச் சட்டத்தை உள்நாட்டுச் சட்ட அதிகார வரம்பில் செயற்படுத்துவது குறித்துப் பார்ப்பதற்கு முதல் இவ்விரு சட்டங்களும் முரண்படும்போது எந்தச் சட்டம் மேலோங்கி நிற்கும் என்பதை அறிந்துகொள்வது அவசியமாகும்.

ஒரு சர்வதேச உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ள சர்வதேசச் சட்ட விதிக்கு நேர் விரோதமாக உள்நாட்டுச் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், அந்த உள்நாட்டு நீதிமன்றம் எந்தச் சட்டத்தைப் பின்பற்றித் தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது.




இருமைத்துவக் கொள்கையாளர்களின் கருத்துப்படி சர்வதேசச் சட்ட விதியை விட உள்நாட்டுச் சட்டமே மேலோங்கியதாகச் சொல்லப்படுகின்றது. அத்தகைய முரண்பாடு எழும்போது, உள்நாட்டு நீதிமன்றம் உள்நாட்டுச் சட்டத்தையே பின்பற்ற வேண்டும். ஏனெனில் இருமைத்துவக் கொள்கையின்படி உள்நாட்டுச் சட்டம் தனியான சட்ட அமைப்பு முறையாகும்.



அந்தச் சட்ட அமைப்பு முறைக்குள் அந்த நாட்டின் இறையாண்மை அரசின் சட்டமே உயர்ந்த சட்டமாகும். இலங்கையும் இருமைத்துவ நாடு என்ற அடிப்படையில் எமது நாட்டில் மேற்குறிப்பிட்ட சட்டப் பிரயோகத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால், இந்த விடயத்தில் ஒருமைத்துவக் கொள்கையாளர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை என்பது அவதானிப்பில் அறிந்ததாகும். சில சட்டவியலாளர்கள், சர்வதேசச் சட்டமே மேலோங்கி நிற்கும் என்கின்றனர். வேறு சில சட்டவியலாளர்கள், குறிப்பிட்ட பிரச்சினைகள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து சில வேளை சர்வதேசச் சட்டமும் சில வேளை உள்நாட்டுச் சட்டமும் மேலோங்கி நிற்கும் என்கின்றனர்.

எதுவாக இருப்பினும் இவை அனைத்துமே நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற சட்டத்தைப் பொறுத்துத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

சர்வதேசச் சட்டங்களும் உள்நாட்டுச் சட்டங்களும் மிகவும் முக்கியமானவை. அவை எவை எந்த நேரத்துக்கும் பொருத்தமானவை என்பதைப் பொறுத்து சட்டப் பிரயோகம் அமையுமானால் நாடும் நாட்டுப் பிரஜைகளும் சுபீட்சமான சூழலில் வாழ்வதற்கான நிலைமை ஏற்படும் என்பது திண்ணம்.

> சர்வதேசச் சட்டங்களும் உள்நாட்டுச் சட்டங்களும் மிகவும் முக்கியமானவை. அவை எவை எந்த நேரத்துக்கும் பொருத்தமானவை என்பதைப் பொறுத்து சட்டப் பிரயோகம் அமையுமானால் நாடும் நாட்டுப் பிரஜைகளும் சுபீட்சமான சூழலில் வாழ்வதற்கான நிலைமை ஏற்படும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25.04.2021 அன்று வெளியான மண்ணுக்குள் விதைக்கப்படும் நஞ்சு கட்டுரையின் தொடர்ச்சி இது.**

# மண்ணுக்குள் விதைக்கப்படும் நஞ்சு

**ந.லோகதயாளன்**

இன்று இலங்கையில் எந்தக் குப்பையையும் விற்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனாலேயே ஆபத்தை உணராது இலாபத்தை கணக்கிடுகின்றனர். இலாபத்தை அடைவோருக்கும் அதன் பாதிப்பு உண்டு என்பதைப் பலர் சிந்திக்கத் தவறுகின்றனர்.

இதேநேரம் விவசாயம் தொடர்பில் தொடர்ந்தும் அதிர்ச்சியான தரவுகள் கிடைத்த வண்ணமே உள்ளன.

அதிலே ஒன்று – இலங்கையிலே மக்கள் தொகைக்கு ஏற்ப யாழ்ப்பாணம் மாவட்டமே புற்று நோயில் அதி கூடிய பாதிப்பு மாவட்டமாக காட்டப்பட்டது. இதற்கான காரணமாக உச்ச பட்ச உரப்பாவனையே கூறப்படுகின்றது.

இதேநேரம் யாழ்ப்பாணம் கந்தரோடைப் பகுதியில் இடிகுண்டு வயலில் வல்லாரைக்காக ஒருவரின் நிலத்தில் அதிகளவில் காபோபியூறா பாவிக்கப்பட்டதால் நிலம் நீல நிறமாக காணப்பட்டது. இந்த இடத்தில் மட்டும் 42 கொக்குகள் இறந்தன. இதற்கான சரியான காரணத்தைக் கண்டுபிடிக்க விவசாயத் திணைக்களம் முதல் விவசாய பீடங்கள் வரையில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தப் போக்குக் காரணமாக இன்று நாட்டில் மக்கள் மரக்கறிகளிற்கு அப்பால் கீரை வகைகளான வல்லாரை, பொன்னாங்காணியை வாங்கக் கூட சிந்திக்க வேண்டியும் சண்டி, அகத்தி, கறி முருங்கை, குறிஞ்சா, முல்லை, முசுட்டை, பிரண்டையை மட்டும் நாடும் நிலைமையும் உருவாகியுள்ளது.

இவ்வாறெல்லாம் பாதிப்பினை ஏற்படுத்தும் முறைமைகள் கையாளப்பட்டாலும், கோப்பாயில் சில இடங்களில் தற்போதும் மாடு கட்டி வளர்த்து, அதன்

> நிலத்தடி நீர் முழுமையாக மாசடைய விவசாயிகளின் தலையில் பழி விழுகின்றது. இதேநேரம் விவசாயி மட்டும் காரணம் அல்லன். மாறாக வாகன சேவீஸ் நிலையங்களின் ஒயில் கலந்த நீர் எங்கே போகின்றது? எத்தனை சேவிஸ் நிலையங்க உள்ளன? அரிசி ஆலைகளின் கழிவு நீர் எங்கே போகின்றது? இவற்றினை யார் கேட்பது?

சாணம் மூலம் உரம் பெற்று, அந்த இடத்தில் பயிர் செய்யும் முறையும் இன்றும் உண்டு. இந்த இடத்தினைத் தேடி மாவட்டத்தின் சகல பாகங்களில் இருந்தும் இன்றும் மக்கள் அப்பகுதிக்கு படை எடுக்கின்றனர்.

இதேநேரம் இரசாயன உரம் 2021ஆம் ஆண்டு காலபோகத்திற்கு இறக்குமதி செய்யப்பட மாட்டாது



என கூறப்படும் தகவலினால் தனியார் கடைகள் கையிருப்பைப் பேண ஆரம்பித்துள்ளனர். இதேநேரம் பசளை தடை செய்யப்பட்டால் சேதனப் பசளைக்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் ஒரு சிலர் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். அவ்வாறு சிந்திப்பவர்கள் எருவைக் கொள்வனவு செய்வதில் தீவிரம் காட்டுகின்றனர்.

இதனால் வன்னியில் அதிக கால்நடை வளர்ப்பவர்களைத் தேடி படை எடுப்பவர்கள. எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளிற்கு முன்பாக 'லோர்ட்' 25 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட எரு தற்போது 50 ஆயிரத்தை தொடுகின்றது. இது உள்ளூர் கால் நடை வளர்ப்பாளர்களையும் ஊக்குவிக்கின்றது.

இவை தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய சம்மேளனச் செயலாளர் க.தியாகலிங்கம் தெரிவிக்கையில் –

விவசாயத்தை அதிகரிக்கச் சொல்லி இந்த பசளைகளை தந்து எம்மை நிலத்தில் போடுமாறு விவசாயத் திணைக்களம்தான் தந்தது. எல்லாவற்றையும் தந்துவிட்டு, இன்று பிழை நடந்த பின்பு விவசாயிகளின் தலையில் பழி விழுகின்றது. இதேநேரம் நிலத்தடி நீர் முழுமையாக மாசடைய விவசாயி மட்டும் காரணம் அல்லன். மாறாக வாகன சேவீஸ் நிலையங்களின் ஒயில் கலந்த நீர் எங்கே போகின்றது? எத்தனை சேவிஸ் நிலையங்கள் உள்ளன? அரிசி ஆலைகளின் கழிவு நீர் எங்கே போகின்றது? இவற்றினை யார் கேட்பது?

பசளைக்கு முன்பு பூவரசங்குழை புதைக்கப்பட்டது. தற்போது குடாநாட்டில் எத்தனை வீட்டில் வேலி உள்ளது? எல்லாம் அழிக்கப்பட்டு மதிலாக மாறிவிட்டன. புளியமரத்தை எங்கேயுமே காண முடியவில்லை. சரி ஆடு, மாட்டை கட்டி சேதனப் பசளையை உருவாக்குவோம் எனத் தோட்டத்திற்குள் கட்டிவிட்டு சாப்பிட வீட்டிற்கு வந்து திரும்பிச் சென்றால் அது களவாடப்படுகின்றது. அப்படியானால் எவ்வாறு விவசாயம் செய்து விவசாயி வாழ்வது? – என்கின்றார்.

பசளைகளைத் தடை செய்யும் அரசு இவை தொடர்பிலும் உரிய கவனத்தைச் செலுத்தி மாற்று ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். மாற்று வழிக்கு சில விவசாயிகள் திரும்பினால் அரசு திடீரென பசளையை இறக்குமதி செய்யும். அப்போதும் நட்டமடைவது விவசாயிகளாகவே இருக்கும். – என்றும் அவர் கூறினார்.

2021ஆம் ஆண்டு காலபோகத்தில் பசளை விநியோகம் இடம்பெறமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் கமநல சேவைத் திணைக்களங்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, 2021ஆம் ஆண்டிற்கான சிறுபோகத்திற்கான பசளை விநியோகம் இடம்பெறுவது உறுதியாகவே உள்ளது. இருப்பினும் காலபோகத்திற்கான உரம் தடை செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளபோதிலும் அது தொடர்பான உறுதியான தகவல்கள் எவையும் அமைச்சில் இருந்து இதுவரை கிடைக்கவில்லை. – என்கின்றனர்.

## முல்லை மாவட்டத்தில் பயிர்செய்யப்படாத ஐயாயிரம் ஏக்கர் நிலம் குறித்து ஆராய்வு

**ந.லோகதயாளன்.**

யாழ்ப்பாணம், மே.02

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன்கட்டு, வவுனிக்குளம் ஆகியவற்றின் கீழ் விவசாயம் செய்ய முடியாத நிலைமையில் இருக்கும் ஐயாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயத்தை சீர் செய்ய சட்ட உதவி ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் விசேட கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலர்கள், மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், முல்லைத் தீவு மாவட்ட சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர்,

மாவட்ட வனவள உத்தியோகத்தர், மாகாண காணி ஆணையாளர், மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர், மாவட்ட வனஜீவராசிகள் உதவிப் பணிப்பாளர், மாவட்ட காணி பயன்பாட்டுக் குழுப் பணிப்பாளர், மாவட்ட கமநல சேவை உதவிப் பணிப்பாளர் ஆகியோர் உள்ளடங்கிய விசேட கூட்டமே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் இளைஞர் குடியேற்றத் திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட நீர்ப்பாசனக் காணிகளின் விவசாய நடவடிக்கைகளை உச்சமாகச் செயற்படுத்துவது தொடர்பாகவும் –

கடந்த காலங்களில் முல்லைதீவு மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட பாரிய குடியேற்றத் திட்டங்கள், இளைஞர் குடியேற்ற திட்டங்களில் நீர் பாசனத்துக்குத் திட்டமிடப்பட்ட விவசாயக் காணிகளில் தற்போது சுமார் 5, 000 ஏக்கர் வரையிலான நிலங்கள் விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படாமல் உள்ளன. இதற்கான காரணங்களை ஆராய்ந்து எதிர்காலத்தில் இக் காணிகளை விவசாய நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டமே 18 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றில் வனவளத் திணைக்களம் வழங்க வேண்டிய பகுதி எனக் கூறப்படும் 3 ஆயிரத்து 200 ஏக்கரும் விடுவிக்கப்பட்டாலும் கூட பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாத ஆயிரத்து 800 ஏக்கர் நிலம் மிகுதியாக உள்ளது என அண்ணளவாகத் தற்போது கணக்கிடப்பட்டுள்ளது.

இதில் விடுவிக்கப்பட்டும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத் தாமைக்கான காரணமாக அப் பகுதிகளிற்குள் அடிக்கடி உயிர் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதான வன விலங்குகள் உட்புகுவதே என்று கூறப்படுகின்றது.

இதிலும் குறிப்பாக யானைகளின் நடமாட்டம் காரணமாகவே விவசாயிகள் அப் பகுதியில் பயிரிடத் தயக்கம் காட்டுகின்றனர். இதற்கான பாதுகாப்பு தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது என மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பந்துலவால் மற்றுமொரு நிவாரணப் பொதி தயார்

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய சதொச நிவாரணப் பொதி – இன்று முதல் 1,000 ரூபா விலைக்கு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த நிவாரணப் பொதியை விட இம்முறை நிவாரணப் பொதியில் ஒரு கிலோ சம்பா மற்றும் ஒரு கிலோ நாட்டரிசி மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சதொச நிவாரண பொதி – 2 இல் உள்ளடங்கியுள்ள பொருள்கள்:

ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி
ஒரு கிலோ கிராம் நாட்டரிசி
ஒரு கிலோ கிராம் மாவு
ஒரு கிலோ கிராம் ஆஸ்திரேலியா சிகப்பு பருப்பு
ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனி
200 கிராம் நெத்தலி (தாய்)
50 மில்லிலீற்றர் திரவ கிருமிநாசினி போத்தல்
முகக்கவசம் ஒன்று
100 கிராம் தேயிலை தூள்
50 கிராம் சோயா மீட் பெக்கெட் ஒன்று
100 கிராம் துண்டு மிளகாய் ஆகியன அடங்கியுள்ளன.

அதன்படி, இன்று தொடக்கம் இலங்கை பூராகவும் உள்ள சதொச விற்பனை நிலையங்களில் இந்த நிவா ரணப் பொதியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நிவாரணப் பொதியைப் பெற்றுக் கொள்ளும் நபர்களுக்கு 5 ரூபா விலைக் கழிவில் 400 கிராம் பால்மா பக்கெட் ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அரசு அனுமதி வழுங்குதல் வேண்டும்

## சிறிதரன் எம்.பி. கோரிக்கை



முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோரை நினைவு கூர இந்த அரசு அனுமதி வழங்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள், தங்களோடு வாழ்ந்து இறந்து போன உறவுகளைக் கண்ணீர் சிந்தி நினைக்கின்ற மே 18 அந்த முள்ளி வாய்க்கால் நினைவு நாளை நினைவு கூர இந்த அரசு அனுமதிக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் அதனைத் தவிர்த்து விட முயன்று வருகிறது. ஆனால் அது அரசாங்கம் தமிழ் மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய அநியாயமான செயல் ஒன்றாகும்.

மிக முக்கியமாக எங்களைப் பொறுத்த வரையில் ஈஸ்டர் தாக்குதலுக்கு வணக்கம் செலுத்துவதற்கு கோரிக்கை விடுக்கின்ற மதத் தலைவர்கள் சரி அல்லது இந்தத் தாக்குதலுக்காக விடுமுறை வழங்கி நாடாளுமன்றம் வரைக்கும் அஞ்சலி செலுத்துகின்ற இந்த நாட்டின் தலைவர்கள் ஒரு நியாயமான நீதியாக ஜனநாயகத்தை நேசிக்கும் தேவர்களாக இருந்தால் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட வேண்டும்.

பகிரங்கமாக தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கு மன்னிப்பு கேட்டு உயிரிழந்தோரை நினைவுகூர்ந்து வணக்கம் செலுத்த அனுமதி வழங்குவதன் மூலமே அவர்கள் தங்களை மனிதர்களாக இந்தப் பூமிப்பந்தில் அடையாளப்படுத்த முடியும்.

ஆகவே, இது ஒரு முக்கியமான தமிழர்களுடைய வரலாற்றில் எல்லோராலும் பார்க்கப்படுகின்ற எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு விடயம். உலகத்திலே 20 ஆம் நூற்றாண்டில் 21 ஆம் நூற்றாண்டு காலகட்டங்களில் மனித குலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு பெரிய பேரழிவு, பெரிய அனர்த்தம். அதன் நினைவு கூரலைத் தடுப்பது பௌத்த மதத்தை நேசிக்கின்ற புத்த பெருமானை வணங்குகின்றவர்கள் புரியும் ஒரு காரியமல்ல.

ஆகவே, அரசு ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு நினைவு கூர எவ்வாறு அனுமதி வழங்கினார்கள். அதே போல கடந்த காலங்களில் 2016 இல் இருந்து தமிழர்கள் இந்த வணக்கத்தை முள்ளிவாய்க்காலில் சென்று உணர்வு பூர்வமாக மேற்கொண்டார்கள் அவர்கள், அந்த வகையில் வணக்கம் செய்வதற்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சஜித்துக்கு சவால் விடுக்கும் அமைச்சர் ஜானக வக்கும்புர

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு முடிந்தால், வெளிநாட்டு தூதுவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தி இலங்கைக்கு ஒரு தடுப்பூசியையாவது பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்களைக் காப்பாற்றத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குமாறு ஜனாதிபதியும், பிரதமரும் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்தமையை நாம் பார்த்தோம்.

தூதுவர்களைச் சந்திப்பது நல்லது. ஆனால் சிண்டு மூட்டிவிடக் கூடாது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு முடிந்தால், வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து நாட்டுக்கு ஒரு தடுப்பூசியை பெற்றுக் கொடுக்குமாறு கோருகிறோம் எனவும் வக்கும்புர குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தல் விதிகளுக்கு முரணாகச் செயற்படும் சாரதிகளுக்கு காலவரையின்றி பாதை அனுமதி தடை

தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு முரணாக, இருக்கை வசதிக்கு மேல் மற்றும் அதற்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களின் பாதை அனுமதியை காலவரையறையின்றி நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை போக்குவரத்துத்துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அறிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பொலிஸ் மற்றும் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒழுங்கை, மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பஸ் சாரதிகளுக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே இழப்புகளை ஈடுகட்ட நியாயமான பஸ் கட்டண உயர்வு வழங்கப்பட்டுள்ளது. கொவிட் நிலைமை கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டத்தில் இந்த விதிகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

ஆனால் தற்போது நிலைமை மோசமாகிவிட்டது. எனவே அனைத்து சாரதிகளும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

# வவுனியாவின் சகல இடங்களிலும் மே தினத்தையொட்டி சுவரொட்டிகள்




புதிய தாராளவாத முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் மற்றும் இராணுவமயப்படுத்தலுக்கு எதிராக தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள் ஒன்றிணைந்து இடதுசாரி கட்டமைப்பை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளுடன் வவுனியாவில் பரவலாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஆம 1 ஆம் திகதி தொழிலாளர் தினம் என்பதால் அனைவரும் எவ்வித பாகுபாடும் இன்றி ஒன்றிணைந்து மேதினத்தை இடதுசாரி கட்டமைப்பைக் கட்டியெழுப்பும் நோக்கில் இடதுசாரி மே தினமாக பிரகடனப்படுத்தி தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவோம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகள் வவுனியா நகர் உட்பட பல்வேறு பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவரொட்டிகள், இலங்கைக்கான சோசலிச கட்சியினரால் உரிமை கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாங்குளம் வைத்தியசாலை ஊழியருக்கு கொவிட் தொற்று

முல்லைத்தீவு - மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாங்குளம் வைத்தியசாலையில் பணியாற்றும் தாதியர் ஒருவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாங்குளம் வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரிடமும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 'தேசத்தின் பொக்கிஷம்' பிரதமருக்கு தேரர் புகழாரம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எமது தேசத்தின் பொக்கிஷமாவார் என பௌத்த லோக மாவத்தை அதுல தஸ்ஸன விகாரை உள்ளிட்ட விகாரைகளின் விகாராதிபதி சிறி தம்ம வங்ச மஹா நிகாயவின் அனுநாயக்கர் பொரள்ளே அதுல நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் புதிய அலுவலக கட்டத் தொகுதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலை மையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு அனுசாசனம் நிகழ்த்திய போதே பொரள்ளே அதுல நாயக்க தேரர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது, அவர் இறைவனின் ஆசீர்வாதத்துடன் ஆரோக்கியமான மற்றும் வளமான வாழ்க்கை வாழப் பிரார்த்திப்பதாகவும், பிரதமரால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத் துச் செல்வதற்கான ஆற்றலும் தைரியமும் அவருக்குக் கிட்ட வேண்டும் என பிரார்த்திப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டமா அதிபர் திணைக்களம் புதிய அலுவலக கட்டடம் திறப்பு



சட்டமா அதிபர் திணைக்களத்தின் புதிய அலுவலக கட்டத் தொகுதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

148 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத் தொகுதி கேட்போர் கூடம், உணவகம் மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளடங்களாக பன்னிரெண்டு மாடிகளைக் கொண்டுள்ளது.

புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கும் வகையில் நினைவுப் பலகையைத் திறந்து வைத்த பிரதமர், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பிரித் பாராயண நிகழ்விலும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புள டி லிவேரா, நீதியமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன, பதில் சொலிசிட்டர் ஜெனரல் சஞ்ஜய ராஜரத்னம், மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தம்மவர்தன மற்றும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருதில் இரு மீனவர்கள் மின்னலுக்குப் பரிதாபகர சாவு

## ஜனாஸாக்கள் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்ப்பு

**நூருல் ஹுதா உமர்**

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது பிரதேசத்தில் இருந்து கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் மீன்பிடிக்காக கடலுக்குச் சென்ற இரு மீனவர்கள் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி ஜனாஸாவாக கரைதிரும்பிய சோகம் கடந்த வெள்ளியன்று இரவு சாய்ந்தமருதில் பதிவானது. கடலில் தங்கியிருந்து மீன்பிடிக்கும் தொழிலை செய்துவந்த இவர்கள் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி மரணித்தனர் என இவர்களுடன் கடலுக்கு மீன்பிடிக்க சென்றவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருதைச் சேர்ந்த அன்ஸார் என்றழைக்கப்படும் இப்ராஹிம் இக்பால் (வயது – 42), எம்.எஸ். அர்சாத் (வயது – 35) ஆகியோரே மின்னலுக்கு இலக்காகி மரணித்துள்ளமையுடன் இவர்களின் ஜனாஸாக்கள் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் காயமடைந்த இப்ராஹிம் மன்சூர் (வயது – 43) மரணித்த (இப்ராஹிம் இக்பாலின் சகோதரர்) கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சாய்ந்தமருது, மாளிகைக்காடு, கல்முனை மீனவர்கள் மத்தியில் சோகம் நிலவிவருகிறது. (100)

# அரச ஊழியர் 10 நாள் கடமை மே 1 முதல் புதிய நடைமுறை

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் பரவலுக்கு மத்தியில் அரசாங்க ஊழியர்களை மட்டுப்படுத்தப்பட்ட நாள்களில் பணிக்கு அழைக்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய மே முதலாம் திகதி முதல் அரச ஊழியர்கள் 10 நாள்கள் மாத்திரமே பணி செய்ய வேண்டும் என அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும் போதே அமைச்சின் அதிகாரி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கோவிட்டுக்கு மத்தியில் அரச ஊழியர்கள் வாரத்திற்கு 3 நாள்கள் பணியாற்ற வேண்டும் என்ற சுற்றிக்கமைய மே மாதத்தில் 18 நாள்களே பணியாற்ற வேண்டும். எனினும் ஓ ஊழியர் மே மாத்தினுள் 10 நாள்கள் மாத்திரம் பணிக்கு வர வேண்டும் எனவும் ஏனைய நாள்களை சனிக்கிழமை, ஞாயிற்றுகிழமை மற்றும் விடுமுறைகளில் பணிக்கு அறிவிக்கலாம்.

நாட்டில் நிலவும் கொரோனா நிலைமைக்கு மத்தியில் அரச ஊழியர்களைப் பணிக்கு அழைக்கும் போது நிறுவனங்களின் பிரதானிகளின் அவசியத்துக்கமைய அழைக்க வேண்டும்.

நிறுவனத்தின் பிரதானிக்கு அவசியம் என்றால் ஒரே ஊழியரை வாரத்துக்கு 5 நாள்களும் அழைக்க முடியும் என அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் வாள்வெட்டு ஒருவர் படுகாயமடைந்தார்

வவுனியா, மே 02

வவுனியா – சோயாவீதிக்கு அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தாண்டிக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர்நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்தை சோயாவீதிக்கு அண்மையில் வழிமறித்த இருவர் அதன் சாரதிமீது வாளால் தாக்கிவிட்டு ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த சாரதி அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வாள்கள், பொல்லுகளுடன் தாக்குதல் நடத்த முயன்ற மூவர் முல்லையில் கைது



முல்லைத்தீவு, மே 02

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட உண்ணாப்புலவு பகுதியில் வாள்கள் மற்றும் பொல்லுகளுடன் தாக்குதல் நடத்த வந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் மூவரும் கடந்த வியாழக்கிழமை பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

சந்கேதநபர்கள் வாள்கள் மற்றும் பொல்லுகளுடன் உண்ணாப்புலவு பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் மீது தாக்குதல் நடத்த வந்துள்ளனர்.

இந்த நிலையில் வீட்டு உரிமையாளர் மீது தூள் வீசிவிட்டு தாக்குதல் நடத்த முற்பட்ட வேளை வீதியால் சென்ற இளைஞர் ஒருவர் சம்பவத்தை அவதானித்து ஊர் மக்களை அழைத்துள்ளார்.

இதன்போது சந்தேகநபர்கள் இருவர் தப்பிச் செல்ல முற்பட்ட வேளை மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவர்களை ஏற்றி வந்த ஓட்டோ சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மூவரிடமும் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வெள்ளைக் கோட்டில் விபத்துக்குள்ளாகி சாவடைந்த பெண்ணுக்குக் கொரோனா

பாணந்துறையில் விபத்தில் உயிரிழந்த பெண்ணுக்கு கொவிட் வைரஸ் தொற்றியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கட்டுகுருந்த பிரதேசத்தில் வெள்ளை கோட்டில் சென்ற பெண் ஒருவர் விபத்துக்குள்ளாகியுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன் வெள்ளி அதிகாலை அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை ஆரம்ப வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரை கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர், கட்டுகுருந்த பகுதியைச் சேர்ந்த 35 வயதான பிரியந்தி பெரேரா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## விவசாய வர்த்தக சந்தைகளினது உற்பத்தி தகவல்கள்

கொரோனா தீவிரத்தொற்றினால் விவசாய வர்த்தக சந்தைகள் முடக்கப்பட்டுள்ளமையினால் 26.04.2021 தொடக்கம் 30.04.2021 வரையிலான சந்தை நிலைவரங்களைப் பெறமுடியாதிருந்தது எனினும் எமது நாட்டு உற்பத்தியின் தை மற்றும் மாசி மாதங்களுக்கான முக்கிய பயிர்களை உற்பத்தி செய்த மற்றும் உற்பத்தி செய்யக் கூடிய நிலைமை இருந்தும் செய்ய தவறிய முக்கிய கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மாவட்டங்களையும் இரண்டு மாதங்களில் ஏற்பட்ட விலைத் தளம்பல்களின் தொகுப்பையும் இன்று காணலாம்.

இந்த தகவலைக் கொண்டு எதிர்வரும் காலத்தில் குறிப்பிட்ட மாதங்களில் குறிப்பிட்ட மரக்கறி தேவை உள்ளது என்பதையும் அந்தந்த மரக்கறி வகையை உற்பத்தி செய்யும் விவசாயிகள் உற்பத்தியை தீர்மானித்துக் கொள்ளலாம்

வடமாகாணத்தைப் பொறுத்தவரை சின்ன வெங்காயம், பச்சைமிளகாய் என்பன மிக கவனிக்க தக்களவு உற்பத்தி செய்யப்படுகிறது.அதிலும் இவை யாழ்பாணத்து உற்பத்தியே ஆகும்.பிற வடமாகாண மாவட்டங்களிலிருந்து கவனிக்க தக்களவு உற்பத்தி மரக்கறிகள் செய்யப்படுவதில்லை

அதிக சந்தைப் பெறுமதியுள்ள மரக்கறி வகைளை தெரிவு செய்து உற்பத்தி செய்து வர்த்தக மையங்களுக்கு எடுத்து செல்வதன் மூலம் விவசாயிகள் இலாபமடையலாம்.

நுகர்வோரைப் பொறுத்தவரை விளைத்தளம்பல்களை கவனித்து உணவு சமைக்கும் விதத்தினை இலகுவாக மாற்றியமைக்க முடியும்.மேலும் வர்த்தக மையங்களின் விலைத்தளம்பல்களினை கவனிப்பதன் மூலம் உள்ளூர் சந்தைகளினது விலைத்தளம்பலை ஊகிக்க முடியும்.அதிக விலை மாற்றங்களை எதிர்கொள்ளும் அன்றாட தேவைகளில் பயன்படுத்தப்படும் மரக்கறிகளை வீட்டுத்தோட்டங்களில் வளர்த்து பயன் பெற முடியும்.இதன் மூலம் நச்சுப்பாவணை குறைந்த மரக்கறிகளை மக்கள் நுகர முடியும்.

குறிப்பு இந்த ஆண்டின் பிற மாதங்களது தொகுப்பினை எதிர்வரும் காலங்களில் பார்வையிடுவோம்.

| பயிர்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தை 1ஆம் கிழமை | தை 2ஆம் கிழமை | தை 3ஆம் கிழமை | தை 4ஆம் கிழமை | மாசி 1ஆம் கிழமை | மாசி 2ஆம் கிழமை | மாசி 3ஆம் கிழமை | மாசி 4ஆம் கிழமை |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறால் பண்ணை அமைக்கும் நோக்கில் கடற்கரைப் பகுதியில் 100 ஏக்கர் நிலம்

## தலைமன்னாரில் நேற்று ஆய்வு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 02

தலைமன்னார் பகுதியில் இறால் பண்ணை அமைக்கும் நோக்கில் கடற்கரைப் பகுதியில் 100 ஏக்கர் நிலம் தனியார் நிறுவனத்திற்கு வழங்கும் நோக்கில் நேற்று (சனிக்கிழமை) விசேட ஆய்வு இடம்பெற்றது.

தலைமன்னார் பகுதியில் உள்ள சுவாமிதோட்டம் பகுதியில் மன்னார் ஆயர் இல்லத்திற்குரிய 100 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தை புத்தளத்தில் உள்ள கே.எம்.என். அக்குவா சேவீஸ் என்னும் நிறுவனத்துக்கு இறால் பண்ணை அமைப்பதற்காக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர். தலைமன்னார் சிறுதோப்பு கட்டுக்காரன் குடியிருப்பை அண்டிய இப்பகுதியில் இந்த இறால் பண்ணை அமைப்பது தொடர்பில் நேரில் ஆய்வு செய்வதற்காக மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், கரையோர பாதுகாப்பு திணைக்களம், நெக்டா, கடற்படையினர், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபை ஆகியோருடன் பிரதேச சபையினருடன் சம்பவ இடத்துக்கு நேரில் வருகைதருமாறு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல வள முகாமைத் திணைக்களம் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதன்போது மேற்படி திணைக்கள அதிகாரிகளிற்கு இறால் பண்ணை அமைக்க திட்டமிடும் பகுதியை அடையாளப்படுத்த ஆயர் இல்ல



பிரதிநியும் வருகை தந்திருந்தார். இதற்கு அண்மையில் உள்ள 137 மீற்றர் கரைவலைப்பாட்டிற்கும் சிறு தொழிலாளர்களின் போக்குவரத்திற்கும் இடையூறி இன்றியும் சுகாதார முறைப்படியும் அனுமதி வழங்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்ற நடவடிக்கைகள் யாவும் வரையறுக்கப்படுமென அறிவிப்பு

நீதிமன்ற நடவடிக்கைகள் வரையறுக்கப்படும் என நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொவிட் பெருந்தொற்றுக் காரணமாக எதிர்வரும் வாரத்தில் நீதிமன்றின் செயற்பாடுகள் வரையறுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று பரவுகையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் உள்ளிட்ட அனைத்துக்கும் இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நிலைமைகளை மதிப்பீடு செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றின் உள்ளேயும், வெளியேயும் சமூக இடைவெளியைப் பேணக் கூடிய வகையில் வழிகாட்டல்கள் வெளியிடப்படுகின்றன எனக் குறிப்பிடப்படுகின்றது. மிகவும் அத்தியாவசிய மான வழக்குவிசாரணைகள்மட்டுமே முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெரும் தொகையான தங்கம் மீட்பு

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 31 கோடியே 70 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

26 கிலோ எடையுள்ள இந்தத் தங்கம் பிஸ்கெட்களாகவும் ஆபரணங்களாகவும் கொண்டு வரப்பட்டுள்ளன என சுங்க ஊடகப் பேச்சாளர், சுங்கப்பணிப்பாளர் சுதந்த சில்வா தெரிவித்தார்.

கட்டாரிலிருந்து வருகை தந்த பயணி ஒருவரால் விமான நிலைய கழிவறைக்குள் வைத்து, மிக சூட்சுமமாக விமான நிலைய சுத்திகரிப்பு பணியில் ஈடுபடும் ஒருவரிடம் கொடுத்து தங்கத்தை வெளியில் கொண்டு



செல்ல முயற்சித்த போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். தங்கத்தை வெளியில் கொண்டு செல்ல முயற்சித்த சுத்திகரிப்பு பணியாளரும் கைது செய்யப்பட்டுள்ளார் என சுங்க ஊடகப் பேச்சாளர் கூறினார்.

# இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு பயணங்கள் மேற்கொள்ளத் தடை

இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு பயணங்கள் மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சிங்கப்பூர் அரசாங்கம் அறிவித்துள்ளது.

நீண்ட கால வீசா அனுமதியுடையவர்கள் மற்றும் குறுகிய கால அனுமதியுடையவர்கள் உள்ளிட்ட இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து சிங்கப்பூருக்குள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரின் கல்வி அமைச்சர் லோரன்ஸ் வொங் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமை இரவு 11.59 மணி முதல் இந்த உத்தரவு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட மேற்குறிப்பிட்ட நாடுகளிலிருந்து ட்ரான்ஸிஸ்ட் அடிப்படையிலும் சிங்கப்பூரிற்குள் பிரவேசிப்பதற்கு இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் அதனை அண்டிய நாடுகளில் கொவிட் நிலைமை மிக மோசமாகக் காணப்படுகின்றது எனவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீ விபத்தில் சிகிச்சை பெற்ற முதியவர் பலனின்றிச் சாவு



முல்லைத்தீவு, மே 02

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்தையன்கட்டு இடது கரை பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த கடை உரிமையாளர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்தையன்கட்டு இடது கரை பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாலை ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு கடைகள் முற்றாக எரிந்து சேதம் அடைந்தன என மேலும் ஒரு கடை பகுதியளவில் சேதமடைந்தது.

இந்நிலையில் முற்றாக எரிந்த ஒரு கடையின் உரிமையாளர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த தீவிபத்தின் போது முத்தையன்கட்டைச் சேர்ந்த 72 வயதுடைய செல்லப்பா அரிராசசிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் ஒட்டுசுடுட்டான் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்கைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.






ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலொன்று கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் இடம்பெற்றது.

# அரச விடுதியில் புகுந்து திருடினர்; குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது

வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள அரச அதிகாரி ஒருவரின் அரச விடுதியில் புகுந்து திருடிய குற்றச்சாட்டில் மூவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச அதிகாரி ஒருவரின் வீட்டுக்குள் கடந்த வாரம் புகுந்த திருடர்கள் 75 ஆயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டரைப் பவுண் நகை என்பவற்றைத் திருடிச் சென்றிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூவரைக் கைது செய்துள்ளனர். கைது செய்த மூவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# 20 வருடங்கள் வசித்த காணியிலிருந்து எழும்பிச் செல்லுமாறு சிலர் அச்சுறுத்தல்

## பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

வவுனியா, மன்னார் வீதி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள காணியில் இருந்து தன்னை எழும்பிச்செல்லுமாறு சிலர் மிரட்டுகின்றனர் எனப் பூவரசங்குளம், பொலிஸ் நிலையத்தில் நபர் ஒருவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முறைப்பாட்டைப் பதிவு செய்த நபர் தெரிவிக்கையில் –

எனது காணியில் இருந்து எழும்பிச் செல்லுமாறு சில நபர்கள் என்னை அச்சுறுத்துகின்றமையுடன், காணியின் அரைவாசியையாவது பிரித்து அவர்களுக்கு வழங்குமாறு தெரிவிக்கின்றனர்.

இல்லாவிடில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தாய் தெரிவித்து சிறையில் பிடித்து அடைக்கப்படுவாய் என்றும் அச்சுறுத்துகின்றனர்.

குறித்த காணியில் 20 வருடங்களுக்கு மேலாக நான் வசித்து வருகின்றேன். இது தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கில் 15 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு பெண்கள் உள்ளிட்ட 5 பேர் பொலிஸாரிடம் சிக்கினர்

## 150 பவுண் தங்க நகைகளும் பெருமளவான தொலைபேசிகளும் மீட்பு





யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 15 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு பல மாதங்களாக தலைமறைவாகியிருந்த கும்பல் சிக்கியுள்ளது எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மூன்று மாவட்டங்களிலும் வீடு உடைத்து தொடர் திருட்டில் ஈடுபட்டு வந்தனர் என்ற குற்றச்சாட்டில் வடக்கின் பல பொலிஸ் நிலையங்களில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற் கொண்ட நடவடிக்கைக்கமைய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து உருக்கப்பட்ட தங்கம், நகைகள் உட்பட்ட 150 பவுணுக்கும் அதிகமான தங்கம் மீட்கப்பட்டுள்ளதுடன் பெறுமதிவாய்ந்த பெருமளவான தொலை பேசிகளும் கைப்பறப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் என்றும், அவர்களில் பெண்கள் இருவரும் ஆண்கள் மூவரும் உள்ளடங்குகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெறப்பட்ட இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என் றும் பொலிஸார் மேலும் கூறினர்.

கைதானவர்களை விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ‘கொரோனா’வின் தீவிரத்தையடுத்து பாடசாலைகளுக்கு விடுமுறை நீடிப்பு

## கல்வி அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



**கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள விடுமுறை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.**

**இந்தத் தகவலை கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இன்று அறிவித்தார்.**

பாடசாலைகளை எப்போது மீளத் திறப்பது என்பது தொடர்பில் எதிர்வரும் 7ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்படும் எனவும், அதுவரையில் நாளாந்தம் நிலைமை மீளாய்வு செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பரிசோதனை முடிவுகள் வெளிவருவதில் தாமதம்

## அதிகமான தொற்றாளர்கள் இருக்கலாம் என்கிறது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் தொடர்பான ஆய்வக அறிக்கைகளை வெளியிடுவதில் தாமதம் நிலவுகின்றது என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மூன்று நாள்களுக்கு முன்பு நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளே தற்போது வெளியிடப்படுகின்றது என இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் கொரோனாப் பரவல் குறித்த உண்மையான நிலைவரத்தை அறிந்துகொள்ள முடியாதுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆய்வக அறிக்கைகளை வெளியிடுவதை விரைவுபடுத்துவது முக்கியமானது எனச் சுட்டிக்காட்டிய அவர், தற்போது வெளியிடப்படும் தினசரி கொரோனாத் தொற்று எண்ணிக்கைகளை விட நாட்டில் அதிகமான தொற்றாளர்கள் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமையைக் கருத்தில் கொண்டுபொதுமக்கள்தேவையில்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும், பொது இடங்களில் மக்கள் நீண்ட நேரம் தரித்து நிற்க வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தி யுள்ளார்.

# திரையரங்குகளுக்குப் பூட்டு!

## சிறுவர் பூங்காக்களும் மறு அறிவித்தல் வரை மூடல்

புதிய சுகாதார வழிகாட்டி வெளியிடப்படும் வரை நாட்டிலுள்ள அனைத்து திரையரங்குகள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் என்பவற்றை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று மிக வேகமாகப் பரவி வரும் சூழ்நிலையில், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரணச் சடங்கு தொடர்பில் அரசு விடுத்துள்ள அறிவிப்பு

ஒருவர் மரணித்தால் 24 மணித்தியாலத்தில் குறித்த மரணச்சடங்கு நிறைவேற்றப்பட வேண்டும் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா அல்லாத மரணச் சடங்குகளே இவ்வாறு இடம்பெற வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மரணச் சடங்கொன்றில் ஒரே நேரத்தில் ஆகக் குறைந்தது 25 பேர் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# ஊரடங்கு உத்தரவு; போலிச் செய்தியாம்

## பொலிஸ் தெரிவிப்பு

நாட்டில் தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றுச் சூழலில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளது என வெளியாகும் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்து ளது.

அவ்வாறு, போலிச் செய்திகளைப் பரப்பு வோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -076 443 8622
காலைக்கதிர் Kalaikkathir

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதீத அன்பு ஆத்திரத்தின் வெளிப்பாடு என்பது உங்களுக்குத் தெரியுமா?

தொகுப்பு -
ப்ரியமதா பயஸ் -



உலகின் ஒவ்வொரு உயிரினத்துக்கும் தனித்த குணங்கள் உள்ளன. சில குணங்கள் ஒரு சில உயிரினத்துக்கு மட்டும் பொதுவில் இருக்கும். மற்றவற்றுக்கு இருக்காது. உதாரணமாக நன்றி. இது நாய்க்கும் மனிதனுக்கும் உரியன. இப்படியாக திருட்டு புத்தி, வருத்தம், ஒளிந்துகொண்டு வாழ்தல், தனிமை, மந்தை உணர்வு முதலியவை குறிப்பிட்ட சில உயிரினங்களில் மட்டும் இருக்கும் பண்புகள் .

அன்பு உணர்வு மட்டும் அனைத்து உயிரினங்களிலும் காணப்படுகின்ற பொதுப் பண்பாகும். அன்பின்றி எவ்வுயிரும் இருக்க வாய்ப்பில்லை. காரணம் இந்த அன்புதான் இன உணர்வை அல்லது இனப்பற்றை ஏற்படுத்துகிறது. எனவே, அன்பு - இயற்கைத் தேவைகளில் தலையாயது. கொடூர விலங்குகளில் கூட இனம் சார் அன்பைக் காணலாம்.

இந்த அன்புணர்வு 'பரிணாமம்' கொடுத்த கொடை ஆகும். ஆனால் இந்தக் கொடையை முறையாக பயன்படுத்த முடியவில்லை என்றால் நமக்குக் கேட்டை விளைவிக்கும்.

அன்பை அனைத்து மனிதரிடமும் ஒரே அலை வரிசையில் நாம் வெளிப்படுத்துவது கிடையாது. அப்படி வெளிப்படுத்தவும் முடியாது. உங்களால் முடியும் என்றால் நீங்கள் சித்தர், யோகி, அல்லது ஞானி. இவர்கள் தான் எல்லாம் துறந்து எல்லோரையும் சமமாக பாவிப்பவர்கள்.

குடும்ப வாழ்வில் அதற்கு வாய்ப்பில்லை. காரணம், குடும்பம் என்பது சுயநல அமைப்பு. எதையும் சுருக்கி வைக்க கற்றுத்தரும் சுயநலப் பள்ளி. பணம், பொருள் மட்டுமன்றி உணர்வுகளையும் சுயநலப் படுத்த வேண்டிக் குடும்பம் நம்மை அதிகாரம் செய்கிறது.

சமூக வாழ்வில் குடும்பம் தாண்டி நம்மால் எதையும் சிந்திக்க முடிவதும் கிடையாது. நமக்குப் பணமோ பொருளோ எது கிடைத்தாலும் குடும்பத்தின் நலனுக்காக என்று எடுத்த எடுப்பிலேயே முடிவுக்கு வந்து விடுவோம். பணமும் பொருளும் புறத்திலிருந்து வருபவை. புற வாழ்வுக்கு அவசியமானவை. அதனால் அப்படி சுயநலத்துடன் இருப்பதில் தப்பில்லை என்று தர்க்கம் பேசலாம். பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை அல்லவா?

மாறாக, அன்பு அகத்திலிருந்து வருவது. என்றென்றும் குறையாதது. இருப்பினும் மனித இனத்துக்குப் பரவலாக்காமல் அன்பைக் கூட பொருள்முதல் போல் குடும்பத்துக்கு என்று நாம் சுருக்கி விட்டோம். இந்தக் கேடு, சமூகம் தோன்றிய பிறகு ஏற்பட்டது. அதற்கு முன்பு பொருள் போல் அன்பும் பொதுவுடைமை நிலையில் இருந்தது.

சரி. குடும்பத்துள் சுயநலம் ஆகிப் போன அன்பை மனிதன் தம் குடும்பத்தினர் அனைவருக்கும் சமமாக காட்டுகின்றானா என்றால் இல்லை. இங்குதான் அன்பிலும் ஏற்றத்தாழ்வு வர்க்கம் தோன்றுகிறது. இதைப் பெற்றோரே தீர்மானிக்கின்றனர். செல்லப் பிள்ளை, முதல் பிள்ளை, கடைசி பிள்ளை, படிக்கும் பிள்ளை, சம்பாதிக்கும் பிள்ளை என ஏதோ ஒரு காரணத்துக்காக தாங்கித் தாங்கி அதீத அன்பு பாராட்டுவர்.

இதற்குள் ஒரு சுயநலம் இருப்பது உங்களில் சிலர் தமது அனுபவத்தில் உணரலாம். சில இடங்களில் அன்பு ஒரு பண்டமாற்றுப் பொருளாகிவிட்டது. சம்பாதித்துப் பணம் கொடுத்தால் தான் அன்பு என்கிற கேவல நிலைக்கு பல குடும்பங்கள் வந்து விட்டன.

காதலைக் குடும்ப அமைப்பு எதிர்ப்பதற்கும் இத்தகு சுயநல அன்பே காரணம். குடும்ப வரம்புக்கு உட்பட்டு நடக்கும் ஏற்பாட்டுத் திருமணத்தில் குடும்ப அன்பு பரிமாற்றம் நிகழ, காதல் திருமணத்தில் அவ்வாறு நிகழ வாய்ப்பின்றி போகிறது. எனவே காதலை குடும்பம் முழுமையாக அங்கீகரிப்பதில்லை. வேறுவழியின்றி ஏற்றுக்கொள்ளும் போக்கே உள்ளது. தமது பிள்ளை குடும்பம் கடந்து யாருக்கோ அன்பு செலுத்துவதை நம்மவர்கள் அவ்வளவு எளிதில் ஏற்பது கிடையாது.

இப்படியாக அன்பின் பரிமாற்றம் குடும்ப நெருக்குதலில் வீட்டுச் சிறை பட்டு பல சமூகக் கேட்டுக்கு அடிப்படை ஆகிறது. அன்பு என்பது பரவலான சக்தி. அனைத்து உயிரினங்களையும் இணைவிக்கும் ஊடு சக்தியாக இருப்பதைக் குடும்ப உணர்வு மறைத்து விடுகிறது. இது ஒருபுறம் என்றால், குடும்பத்தில் ஒரு சிலர் மீது மட்டும் அதிகமாக செலுத்தினால் இருவருக்கும் நன்மைவிடத் தீமையே விளைவிக்கும்.

அன்பு ஒரு சக்தி....மனோசக்தியின் ஒரு வெளிப்பாடு. அதை வெளிப்படுத்தாமல் இருக்க கூடாது. அதே சமயம் ஒரு நபருடன் சுருங்கி விடவும் கூடாது. இரண்டும் ஆபத்தானது. சக்தியை வெளிப்படுத்தாமல் இருந்தால் மின்கலம் கெட்டுப் போய்விடும். அதேபோல் ஒன்றில் மட்டும் அதிக சக்தியை செலுத்தினால் அதை பெறுகின்ற பொருள் அதிக மின்சாரம் பெறும் மின்கலம் போல் பாதிக்கும்.

அன்பு என்பதை இயல்பாக வாழ்வதற்கான பரிமாற்றமாக வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, நமது சுயத்தை இழக்கும் அளவு யாரிடமும் அன்பு பாராட்டக் கூடாது. செல்லம், உயிர் நண்பன், தலைவர் விசுவாசம் முதலியவை சுயத்தை இழக்கச் செய்து விடும்.

சுயம் இழந்தால் நாம் மற்றவரின் கட்டுப்பாட்டுக்குள் ஆட்பட்டு விடும் ஆபத்து உள்ளது. செல்லமாக வளர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணங்களுக்கு ஏற்ப பெற் றோர்கள் ஆடுவதையும் நொந்துப் போவதையும் நீங்கள் காணலாம். இதுதான் சிலர் நட்பிலும் விசுவாசத்திலும் உள்ளது. சாமியார்களிடம் பலர் அடிமை ஆவதற்கு வரம்பு மீறல் காரணமாகும்.

எதுவும் வரம்பு மீறும் போது வெறி ஆகிறது. இந்த வெறித்தனம், பக்தி, விசுவாசம், நட்பு, பாசம், காதல் ஆகிய உணர்வெழுச்சிகளில் நம்மால் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. உண்ணும் உணவில் கொண்ட வேட்கை வரம்பு மீறினால் கூட வெறி வந்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியும். அளவுக்கு மீறினால் அமுதம் கூட நஞ்சாகும் அல்லவா.

நம் மனதில் சாந்தம், மூர்க்கம் ஆகிய அடிப்படை உணர்வுகள் உள்ளன. இவ்விரண்டும் எதிரும் புதிருமான துருவங்கள். நமது ஒவ்வோர் உணர்வும் இவ்விரண்டுக்கிடையே ஊசலாடுகிறது. தொடக்கத்தில் எல்லா உணர்வும் சாந்தத்தில் தொடங்குகின்றன. இங்கே சாந்தம் என்பது வீரியத்தின் அளவைக் குறிக்கும். அதாவது தொடக்கத்தில் எல்லா உணர்வும் பூச்சியத்தில் தொடங்குகின்றன. இதில் நடுநிலை ஒன்றுண்டு. அதுவரை நாம் எந்த உணர்வையும் கடத்தலாம்.

இப்புள்ளியை தாண்டி உணர்வு கடந்தால் அந்த உணர்வு இயல்பில் மூர்க்கம் அடையத் தொடங்கி விடுகிறது. குறிப்பாக வரம்பு மீறிய அன்பு மூர்க்கத்துடன் இணைந்து விடுகிறது. பிறகு மூர்க்கத்தனமான அன்பு வெளிப்பட ஏதுவாகிறது.

நாம் நமது சுயத்தை இழந்து அன்பு செலுத்தும் போது அந்த நபரும் சுயமிழந்து அன்பு செலுத்த முற்பட்டால் சமச்சீர் பரிமாற்றம் கிட்டும். இது லட்சத்தில் ஒரு காதலில் மட்டும் காணலாம். மற்ற காதலில் அதிகாரம் செலுத்துவதில் போட்டியே விஞ்சி நிற்கிறது. ஒரு கட்டத்தில் காதல் உடைப்பு நிகழ்ந்து விடுகிறது.

குறித்துக் கொள்ளுங்கள். சுயம் இழந்து எந்த உணர்வையும் வெளிப்படுத்த வேண்டாம். சுயம் இழக்கத் தயாராகும் நபரிடம் சுயம் இழந்தால் தவறில்லை. இது காதலில் மட்டுமே வாய்க்கும். அப்படி அமையும் லட்சத்தில் ஒரு காதல் தெய்வீகக் காதலே என்பதில் ஐயம் இல்லை.

# மனம் எனும் மாயை



'உள்ளம் என்றால் என்ன? பல ஆண்டுகளாக பலர் கேட்கும் கேள்வி இது . அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் 'தீண்டாமை நனவிலி' எனும் நூலில் உள்ளம் பற்றிய விளக்கம் இது - உள்ளம். .? இதற்கான விடை அந்தச் சொல்லில் இருக்கிறது. உள்ளுதல் என்றால் எண்ணுதல். உள்ளல் என்றால் எண்ணல். உள்ளம் என்றால் எண்ணம். எனவே, எண்ணமே உள்ளம். உள்ளமே எண்ணம். அது ஒரே ஒரு எண்ணமாகவும் இருக்கலாம். ஆயிரம், லட்சம், கோடிக்கணக்கான எண்ணங்களாகவும் இருக்கலாம். ஆக, எண்ணம் அல்லது எண்ணங்களின் தொகுதியே உள்ளம்' (ப. 285).

உள்ளத்தைக் குறிக்கும் **PSYCHE** எனும் ஆங்கிலச் சொல் கிரேக்கத்தில் இருந்து கையாளப்பட்டு வருகிறது. இதன் பொருள் உயிர், மனம், ஆவி. சில வேளை சுவாசத்தையும் குறிக்கப் பயன்படுத்துவதும் உண்டு. கிரேக்க, இலத்தீன் சொல்லான 'சைகி' உணர்த்த வருகிற பொருண்மைகள் மனம் தொடர்பான நுண்மையான பொருள் ஏதும் இல்லை. அதாவது, தமிழ்ச் சொல்லில் உள்ள ஆழம் இலத்தீன் - ஆங்கிலச் சொல்லில் இல்லை. தமிழரின் அறிவியல் நுண்மைக்கு இது ஒரு சான்று.

உடலும் மனமும் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. உடல் பருப்பொருள் என்பதால் இது கட்புலன் அறியக் கூடிய மனமோ கட்புலனுக்கு ஆட்படாத பொருள். எனவே, மனதை முழுமையாக அறிவது இன்றளவும் கடினமாக உள்ளது. உயிரினங்களின் செயல்பாடுகளைக் கொண்டு அவற்றின் மனநிலையை ஊகிக்கலாம். ஓரறிவு உயிரியான தாவரங்களுக்கும் மனம் இருப்பதை அறிவியல் கண்டுள்ளது. காணக் கிடைக்கிற அனைத்து உயிரினங்களுக்கும் மனம் இருந்தாலும் மனித மனம் தனித்துவமானது. பிற உயிரினங்களின் மனம் உடல் சார்ந்து இயங்குவது. அதாவது, மனதை அவற்றின் உடல் வழி நடத்துகின்றது. உடலுக்கு அப்பால் அவற்றின் மனம் இயங்காது. மாறாக, மனித மனம் உடலைவிட சமூகம் சார்ந்து இயங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

உடல், மனம், சமூகம் ஆகிய மூன்றின் கூட்டு உயிரி தான் மனிதன். இவற்றில் மூன்றையும் நன்முறையில் பேண வேண்டிய கடமை ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளது. நோயற்ற உடல், குறைவற்ற மனம், பிணக்கற்ற சமூகம் ஆகியவை வாய்க்கப்பட்ட மனிதனுக்கு இந்த உலகம்தான் சொர்க்கம். இவற்றில் ஏதேனும் ஒன்று அமையப் பெறவில்லை என்றால் இவ்வுலகம் நரகமே. எனவே, உண்மையில் மனிதனுக்கு சொர்கமும் நரகமும் பூமியில்தான் உள்ளன. சொர்க்கமா நரகமா என்பது அவரவர் கையில் உள்ளது.

மனிதனுக்கு உடல் நலம், சமூக நலம் ஆகியவற்றைக் காட்டிலும் மனநலம் அவசியமானது. காரணம், அவன் வாழ்க்கைக்கு மனமே ஆதாரம். மனதால் வாழ்பவன் என்பதால்தான் மனுஷன் என்பர். 'மனஸ்' என்பதிலிருந்து மனுஷ், மனுஷன், மனிதன் முதலிய சொற்கள் தோன்றிற்று. எனவே, மனிதனுக்கு மனமே ஆதாரம். அதைப் பேணுவது உயிரைப் பேணுவதற்கு சமம். இதற்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று. நம் மனநலத்தை குலைக்கும் விடயங்களை அறிந்து அவற்றிலிருந்து விலகி இருந்தால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவில் இருந்து முழு உலகமும் பாதுகாக்கப்பட மே மாதம் முழுவதிலும் திருச்செபமாலை சொல்லுங்கள்!

## யாழ் ஆயர் விடுக்கும் அழைப்பு



'அஞ்சாதே நான் உன்னுடன் இருக்கிறேன்' ஏசாயா 41:10) - என்ற இறை வார்த்தையை மனதிருத்தி கொரோனாத் தொற்றில் இருந்து உலகம் முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டி திருச்செபமாலை மாதமான மே மாதம் முழுவதிலும் யாழ் மறைமாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் மற்றும் மரியன்னை யாத்திரைத் தலங்கள் அனைத்திலும் திருச்செபமாலை சொல்லுங்கள்.

இதனைவிட யாழ் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க மக்கள் அனைவரும் மே மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் வீடுகளில் குடும்ப செபமாலை சொல்லி கொரோனாத் தொற்றில் இருந்து உலகம் முழுவதும் பாதுகாக்கப்பட அன்னையிடம் இரந்து வேண்டுங்கள்! - என யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளர்.

